Crl.Misc/ 39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE VALANGAIMAN

Calendar

Miscellaneous **Case No. CC. 22 /2025**

Preliminary Register

Deposition of **PW-1 LW -1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சரஸ்வதி | Husband Name | : | வெங்கடேசன் |
| Village | : | அவிச்சாகுடி | Taluk | : | வலங்கைமான் |
| Caste | : | | Calling | : | பெட்ரோல் பங்க் வேலை |
| Religion | : | | Age | : | 40 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 03st day of November 2025.

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

<u>முதல் விசாரணை-</u>

நான் மேற்படி முகவரியில் வசித்து திருவலஞ்சுழியில் உள்ள பெட்ரோல் பங்கில் வேலை பார்த்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். ஆஜர் எதிரிகள் எங்கள் தெருவில் வசித்து வருகிறார்கள். ஆஜர் எதிரிகளுக்கும் எனது கொழுந்தனார் முருகானந்தம் என்பவருக்கும் இடையே ஏற்கனவே பிரச்சனை இருந்து வந்தது. இந்நிலையில் கடந்த 05.01.2025 ம் தேதி இரவு 8.00 மணியளவில் எனது கொழுந்தனார் ரமேஷ் என்பவர் வீட்டிற்க்கு சாமி கும்பிட சென்றேன். ரமேஷ்

வீட்டிற்கு எதிரிகளின் வீட்டை கடந்து தான் செல்ல வேண்டும். அவ்வாறு நான் ரமேஷ் வீட்டிற்க்கு சாமி கும்பிட சென்று விட்டு மீண்டும் எனது வீட்டிற்கு செல்வதற்காக ஆஜர் எதிரிகளின் வீட்டை கடந்து செல்லும் போது ஆஜர் எதிரி கோமதி என்னை குச்சிகாரி தேவிடியா மகளே என்று கொச்சை வார்த்தைகளால் திட்டினார் நான் ஆஜர் எதிரி கோமதியிடம் கேட்டதற்க்கு மீண்டும் என்னை திட்டினார் ஆஜர் எதிரி ராஜாவும் என்னை குச்சிகாரி தேவிடியா மகளே என்று கொச்சை வார்த்தைகளால் திட்டினார். ஆஜர் எதிரி ராஜா சண்டைகாரர்களை தான் திட்டுகிறேன் உங்களை திட்டவில்லை என்று சொன்னார். அதற்கு நான் எனது கொழுந்தனார் முருகானந்தம் இங்கு இல்லை என்னை தான் திட்டுகிறேன் என்று சொன்னேன். அப்போது எனது கொழுந்தனார் ரமேஷ் வீட்டில் இருந்து எனக்கு பின்னால் வந்து கொண்டிருந்த எனது மகன்கள் முகிலன் மற்றும் அமுதன் இருவரும் என்னை வீட்டிற்கு போமா என்று சொன்னார்கள். அப்போதும் ஆஜர் எதிரி ராஜா எனது மகன்களை குச்சிகாரி தேவிடியா மகனே என்று கொச்சை வார்த்தைகளால் திட்டினார். நான் சண்டைகாரர்களை தான் பேசுகிறேன் உனது அம்மாவிற்கு என்ன வந்தது என்று சொல்லி உனது அம்மா முருகானந்ததிற்கா உங்களை பெற்றார்கள் என்று சொல்லி உங்களுக்கு ஏன் ரோசம் வருகிறது என்று சொன்னார். எனது மகன்கள் வாமா வீட்டிற்கு செல்லலாம் என்று அழைத்த போது ஆஜர் எதிரி ராஜா அவரது வீட்டில் இருந்து கம்பியை எடுத்து வந்து எனது மகன் அமுதனை கம்பியால் அடித்தார். ஆஜர் எதிரி கோமதி தரக்குறைவாக எங்களை பேசினார். ஆஜர் எதிரி அனுசியா எனது மகன் முகிலனை செருப்பால் அடித்தார். ஊர்க்காரர்கள் எங்களை சமாதனப்படுத்தி அனுப்பி வைத்தார்கள். நான் நடந்த சம்பவம் குறித்து வலங்கைமான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான் அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் ( புகார் **அரசுதரப்பு சான்றாவனம் 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது) போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை -**

சம்பவம் ஆஜர் எதிரிகளின் வீட்டு வாசலில் நடைபெற்றது என்றால் சரிதான். ஆஜர் எதிரிகளின் வீட்டிற்க்கும் எனது கொழுந்தனார் வீட்டிற்க்கும் என்ன பிரச்சனை என்று எனக்கு தெறியுமா என்றால் ஆஜர் எதிரிகள் வளர்த்த நாய் இரவு நேரத்தில் எனது கொழுந்தனாரை பார்த்து குரைத்ததால் அவர்களுக்குள் பிரச்சனை ஏற்பட்டு முன்விரோதம் இருந்து வந்தது. ஆஜர் எதிரிகளுக்கும் எங்களுக்கும் தனிபட்ட முறையில் வேறு எந்த பிரச்சனையும் இல்லை என்றால் சரிதான். ஆஜர் எதிரிகள் எங்களுக்கு உறவினர் என்றால் சரிதான். ஆஜர் எதிரிகள் என்னை குறிப்பிட்டு திட்டினார்களா என்றால் ஆம் என்னை குறிப்பிட்டு திட்டினார்கள். எனது குடுப்பத்திற்க்கும் ஆஜர் எதிரிகளுக்கும் முன்விரோதம் இருந்து வந்ததா என்றால் இல்லை இந்த பிரச்சனைக்கு முன்பு நன்றாக தான் பேசி கொண்டு இருந்தோம். ஆஜர் எதிரி ராஜா கம்பியை காட்டி மிரட்டினாரா அல்லது அடித்தாரா என்றால் எனது மகன் அமுதனை கம்பியால் அடித்தார். இந்த சம்பவத்தில் இரண்டு தரப்பினர்களுக்கும் காயம் ஏற்பட்டது என்றால் சரிதான். சம்பவத்தின் போது ஊர்காரர்கள் திரண்டு இரு தரப்பினரையும் சமாதனம் செய்தார்கள் என்றால் சரிதான். நான் காவல் நிலையம் செல்லும் போது எத்தனை மணி இருக்கும் என்றால் அன்றைய தினம் இரவு 08.00 மணிக்கு சென்றேன். நான் போலீசார் விசாரணையில் 08.00 மணிக்கு தான் சம்பவம் நடைபெற்றது என்று கூறியுள்ளேன் என்றால் நான் சம்பவம் நடைபெற்ற உடனே ஆவூர் அரசு மருத்துவமணைக்கு சென்று முதலுதவி சிகிச்சை பெற்று உடனே காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். நான் எனது மகனை வலங்கைமான் அரசு மருத்துவமணைக்கு சிகிச்சை அளிக்க அழைத்து வந்தேனா என்றால் இல்லை. எனது மகனை அவரது நண்பர்கள் வலங்கைமான் அரசு மருத்துவமணைக்கு சிகிச்சை அளிக்க அழைத்து வந்தார்கள். ஆஜர் எதிரி ராஜா எனது மகன் அமுதனை கம்பியால் அடித்த போது ஊர்க்காரர்கள் வந்துவிட்டார்களா என்றால் ஆமாம் வந்துவிட்டார்கள். எனது கொழுந்தனார் முருகானந்ததிற்க்கும் ஆஜர் எதிரிகளுக்கும் இடையே முன்விரோதம் இருப்பதால் நான் ஆஜர் எதிரிகள் மீது

பொய் புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2025.11.03 19:31:41 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வலங்கைமான்.

Crl.Misc/39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE

VALANGAIMAN

Calendar

Miscellaneous **Case No. CC. 22/2025**

Preliminary Register

Deposition of **PW-2 LW-2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | முகிலன் | Father Name | : | வெங்கடேசன் |
| Village | : | அவிச்சாகுடி | Taluk | : | வலங்கைமான் |
| Caste | : | | Calling | : | லோடுமேன் |
| Religion | : | | Age | : | 19 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 03st day of November 2025.

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

**முதல் விசாரணை-**

நான் மேற்படி முகவரியில் வசித்து கும்பகோணத்தில் உள்ள சுப்ரீம் ஹார்டுவேர்ஸ் என்ற கடையில் லோடுமேனாக வேலை பார்த்து வருகிறேன். அ.சா.1 எனது அம்மா ஆவார். பட்டியல் சாட்சி 3 எனது தம்பி ஆவார். ஆஜர் எதிரிகளை தெரியும். ஆஜர் எதிரிகள் எங்கள் தெருவை சேர்ந்தவர்கள். கடந்த 05.01.2025 இரவு 08.00 மணியவில் அ.சா.1 எனது அம்மா எனது சித்தப்பா ரமேஷ் என்பவரது வீட்டில் சாமி கும்பிடுவதற்காக சென்றார். எனது சித்தப்பா ரமேஷ் வீட்டிற்க்கு ஆஜர் எதிரிகளின் வீட்டை கடந்து தான் செல்ல வேண்டும். எனது அம்மா சாமி கும்பிட்டுவிட்டு எனது சித்தப்பா வீட்டில் இருந்து எங்கள் வீட்டிற்க்கு வந்து கொண்டிருந்த போது ஆஜர் எதிரி கோமதி அவரது வீட்டின் திண்ணையில் அமர்ந்து

கொண்டு எனது அம்மாவை பார்த்து, நாயால் ஏற்பட்ட பிரச்சனையில் ஏற்கனவே ஒருவனை (எனது பெரியப்பா முருகனந்தத்தை) ஜெயிலுக்கு அனுப்பி வைத்தோம் அதே போல உன்னையும் பிரச்சனை செய்து அனுப்பி வைக்க வேண்டும் என்று சொன்னார். எனது அம்மாவை பற்றி ஆஜர் எதிரி கோமதி தவறாகவும் தகாத வார்த்தைகளாலும் பேசினார்.(சாட்சி ஆஜர் எதிரி கோமதி தனது அம்மாவை பற்றி பேசிய வார்த்தைகள் தன்னால் இந்நீதிமன்றத்தின் முன்பு கூறமுடியவில்லை என்று கூறுகிறார்) அப்போது ஆஜர் எதிரிகள் ராஜா மற்றும் அனுசியா இருவரும் எனது அக்காவிடம் என்ன பிரச்சனை செய்கிறாய் என்று கூறி எனது அம்மாவை தகாத வார்த்தைகாளல் திட்டினார். வீட்டில் இருந்த நானும் எனது பெரியப்பா மகன் கபிலன் மற்றும் எனது தம்பி அமுதன் மூவரும் வந்து பார்த்த போது ஆஜர் எதிரி ராஜா வாங்கடா உங்களுக்காக தான் காத்துக்கிட்டு இருக்கேன் என்று சொல்லி கையில் வைத்திருந்த கம்பியால் எங்களை அடிக்க வந்தார் அதனை தடுத்த எனது தம்பி அமுதனை இடது தோள்பட்டையில் ராஜா கம்பியால் அடித்து காயம் ஏற்படுத்தினார். ஆஜர் எதிரிகள் கோமதியும் அனுசியாவும் எனது அம்மாவை செருப்பால் அடித்தார்கள். சண்டையை தெருக்காரர்கள் விலக்கிய போது ஆஜர் எதிரி ராஜா இன்றைக்கு தப்பித்து விட்டீர்கள் என்றைக்காவது ஒரு நாள் மூவரும் மாட்டிக்கொள்வீர்கள் அன்று பார்த்துக் கொள்கிறேன் என்று மிரட்டினார். எனது அம்மா காயம்பட்ட எனது தம்பி அமுதனை ஆவூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்று அங்கு அவனுக்கு சிகிச்சை எடுத்து கொண்டு அதன் பிறகு வலங்கைமான் காவல் நிலையத்தில் நடந்த சம்பவம் குறித்து புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். கடந்த 01.11.2025 ம் தேதி இந்நீதிமன்றத்தில் வழக்கிற்காக ஆஜர் ஆகிவிட்டு வீட்டிற்க்கு செல்லும் போது ஆஜர் எதிரி ராஜா எங்களை கோர்ட்டுக்கு இழுத்துவிட்டாய் உங்களை திரும்பி ஏதாவது செய்வேண்டா என்று எங்களை மிரட்டினார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை -**

ஆஜர் எதிரிகளும் நாங்களும் ஒரே தெருவை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். இந்த பிரச்சனைக்கு முன்பே ஆஜர் எதிரிகளுக்கும் எங்களுக்கும் வாய்த்தகராறு ஏற்பட்டு முன்விரோதம் இருந்து வருகிறது என்றால் சரிதான். மேற்படி பிரச்சனை எப்போது ஏற்பட்டது என்றால் எனது அம்மா எனது சித்தப்பா ரமேஷின் வீட்டிற்க்கு சாமி கும்பிட சென்று விட்டு திரும்பிய போது ஏற்பட்டது. ஆஜர் எதிரி ராஜா எனது தம்பி அமுதனை கம்பியால் அடிக்க வந்த போது ஊர்க்காரர்கள் திரண்டு விட்டனர் என்றால் சரிதான். ஊர்க்காரர்கள் பிரச்சனையை விலக்கி விட்ட பிறகு காவல் நிலையம் சென்று புகார் கொடுக்க சென்று விட்டோம் என்றால் ஆவூர் அரசு மருத்துவமணைக்கு எனது தம்பி அமுதனை அழைத்து சென்று விட்டு அதன் பிறகு காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம். மேற்படி சம்பவம் ஆஜர் எதிரி கோமதியின் வீட்டின் வாசலில் வைத்து தான் நடைபெற்றது என்றால் சரிதான். எங்களுக்கும் ஆஜர் எதிரிகளுக்கும் இடையே வாய்த்தகராறு ஏற்பட்டு முன்விரோதம் இருப்பதால் ஆஜர் எதிரிகளின் மீது பொய் புகார் கொடுத்து அதற்க்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2025.11.03 19:32:14 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வலங்கைமான்.

Crl.Misc/39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE

VALANGAIMAN

Calendar

Miscellaneous **Case No. CC. 22/2025**

Preliminary Register

Deposition of **PW-3 LW-4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | கோபால் | Father Name | : | சாமிநாதன் |
| Village | : | அவிச்சாகுடி | Taluk | : | வலங்கைமான் |
| Caste | : | | Calling | : | கூலி |
| Religion | : | | Age | : | 55 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 03[st] day of November 2025.

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

**முதல் விசாரணை-**

நான் மேற்படி முகவரியில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1, அ.சா.2 மற்றும் பட்டியல் சாட்சி 3 எனது உறவினர்கள் ஆவார்கள். ஆஜர் எதிரிகள் தெரியும். ஆஜர் எதிரிகள் எனது ஊர்க்காரர்கள். ஆஜர் எதிரி கோமதியின் வீடு தான் எனது தெருவில் நுழைந்ததும் முதல் வீடு ஆகும். ஆஜர் எதிரி ராஜா 1ம் எதிரி கோமதியின் வீட்டிற்க்கு எதிர்புறம் வீட்டில் குடியிருந்து வருகிறார். ரமேஷ் என்பவரது வீடு ஆஜர் 1வது எதிரியின் வீட்டிற்க்கு கீழ்புறம் உள்ளது. இன்றிலிருந்து தோராயமாக இரண்டு மாதங்களுக்கு முன்பு ரமேஷ் வீட்டில் இரவு 08.00 மணிக்கு மேல் சாமி கும்பிட்டார்கள் நான் அதற்கு சென்றிருந்தேன். அப்போது அ.சா.2 ம்

கபிலனும் அவர்களுக்குள் பேசிக்கொண்டு வந்தபோது ஆஜர் எதிரி கோமதியின் சித்தப்பா மகன் நீலகண்டன் என்பவர் அ.சா.2 யும் கபிலனையும் அழைத்து தமாசாக பேசிக்கொண்டு இருந்தார். அப்போது முருகானந்தத்திற்க்கும் எதிரிகளுக்கும் நாய் கடித்ததாக இருந்த பிரச்சனைமற்றும் அவர்களுக்குள் இருந்த முன்விரோதத்தினை மனதில் வைத்துக் கொண்டு ஆஜர் 1 வது எதிரியின் அம்மா சந்திரா என்பவர் அ.சா.2, கபிலனை பார்த்து எனது கொழுந்தனார் வீட்டில் இவங்களுக்கு என்ன வேலை என்று திட்டினார். ஆஜர் 1 வது எதிரியும் எனது இடத்தில் என்ன வேலை என்று அ.சா.2, கபிலனை கொச்சை வார்த்தைகளால் பேசினார். அப்போது ஆஜர் எதிரி ராஜா ஏற்கனவே முருகானந்தத்தை உள்ளே அனுப்பி விட்டோம் இவர்களையும் விடக்கூடாது என்று சொல்லி அ.சா2 , கபிலனை நோக்கி கம்பியை எடுத்து கொண்டு அடிப்பதற்காக வந்தார். அப்போது அதை தடுக்க வந்த அமுதனை ஆஜர் எதிரி ராஜா கையில் அடித்து விட்டார். ஆஜர் எதிரிகள் கோமதி மற்றும் அனுசியா இருவரும் செருப்பாலும், விளக்குமாறாலும் அ.சா.2 ஐ அடித்தார்கள். நான் நடந்த சம்பவத்தை பேசி கொள்ளலாம் என்று சமாதானம் செய்து அ.சா.2, கபிலன், அமுதன் ஆகியோர்களை அனுப்பி வைத்தேன். இந்நடந்த சம்பவம் குறித்து அ.சா.1 காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** -

அஜர் எதிரிகளும், அ.சா.1 , அ.சா.2 மற்றும் பட்டியல் சாட்சி 3 ஆகிய அனைவரும் எனது உறவினர்கள் தான் என்றால் சரிதான். அ .சா. 1 எனது அண்ணனின் மருமகள் என்றால் சரிதான். ஆஜர் எதிரி கோமதி எனது தூரத்து உறவு என்றால் சரிதான். சம்பவம் நடைபெற்ற போது நான் சம்பவ இடத்தில் இருந்தேன் என்றால் சரிதான். ஆஜர் எதிரிகளுக்கும் அ.சா.1 னின் குடும்பத்தினருக்கும் இடையே நாய் கடித்தது சம்பந்தமாக முன்விரோதம் இருந்து வந்தது என்றால் சரிதான். ஆஜர் எதிரிகளுக்கும் அ.சா.1 னின் குடும்பத்தினருக்கும் இடையே நாய் கடித்து பிரச்சனை ஏற்பட்டதற்க்கு பின்பு இந்த பிரச்சனைஏற்பட்டதற்க்கு முன்புள்ள இடைபட்ட காலத்தில் ஏதேனும் பிரச்சனை இருந்ததா என்றால் இல்லை. அ .சா. 1 எனது அண்ணனின் மருமகள்

என்பதால் நான் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2025.11.03 19:32:25 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,
வலங்கைமான்.